


**02.03.2025**

**தலைப்பு செய்திகள்**

1. குஜராத் மாநிலம் ஜாம்நகரில் வந்தாரா விலங்குகள் மீட்பு மறுவாழ்வு மையத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பார்வையிடுகிறார்.
2. போதை பொருள் பயன்பாடு இல்லா இந்தியாவை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதில் மத்திய உணவு சேமிப்பு நிறுவனம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.
4. தமிழக மீனவர்களின் கைது பிரச்சனைக்கு தீர்வு காண்பது தொடர்பாக மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.
5. ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா -நியூசிலாந்தை துபாயில் இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி குஜராத் மாநிலம் ஜாம்நகர் விலங்குகள் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையமான வந்தாராவை இன்று பார்வையிடுகிறார்.

தொடர்ந்து சாசன் சோம்நாத் அறக்கட்டளை கூட்டத்தில் பங்கேற்கும் பிரதமர் நாளை 7ஆவது தேசிய வன விலங்கு வாரிய கூட்டத்தில் பங்கேற்கிறார்.

வன விலங்குகள் மற்றும் காடுகளின் பாதுகாப்பையும் மேம்பாட்டையும் வலியுறுத்தும் பல்வேறு கருத்துக்கள் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளன.

**********

**ரமலான்**

இஸ்லாமியர்களின் புனித ரமலான் மாதம் இன்று தொடங்கியதை அடுத்து பிரதமர் திரு.நரேந்திரமோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அமைதி, நல்லிணக்கம், உள்ளிட்டவற்றை இந்த புனித மாதம் கொண்டுவரட்டும் எனவும், இரக்கம் கருணை மற்றும் சேவையின் மதிப்புகளை இம்மாதம் நினைவூட்டுவதாகவும் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் நாகை நாகூர் தர்கா,

தூத்துக்குடி ஜாமியா பள்ளிவாசல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இன்று சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன.

திருவாரூர் மாவட்ட பள்ளிவாசல்களில் நடைபெற்ற சிறப்பு தொழுகைகள் குறித்து எமது செய்தியாளர்

**வாய்ஸ்**

**********

**ஜக்தீப்தன்கர்**

குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணாக்கர் மற்றும் ஆசிரியர்களுடன் இன்று கலந்துரையாடுகிறார்.

முன்னதாக கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.

**********

**அமித்ஷா**

போதை பொருள் பயன்பாடு இல்லா இந்தியாவை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

பண மோகத்திற்காக போதை பொருட்களை கடத்தி இளையோருக்கு விற்பனை செய்வோர்மீது எவ்வித சமரசமும் இல்லாமல் அரசு தண்டனைகளை வழங்கி வருவதாக சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அரசு மேற்கொண்டுள்ள தீவிர நடவடிக்கைகள் காரணமாக 29 போதை பொருள் கடத்தல் காரர்களுக்கு 12 வெவ்வேறு வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

**பிரல்ஹாத் ஜோஷி**

நாட்டில் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும், விநியோக சங்கிலியை வலுப்படுத்துவதிலும் மத்திய உணவு பொருள் சேமிப்பு நிறுவனம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இக்கழகத்தின் 69ஆவது நிறுவன தின விழாவில் உரையாற்றிய அவர், பிரதமரின் கரீப் கல்யாண் யோஜனா, **அன்னதாதா ஆய் சன் ரக்ஷன் அபியான்** ஆகிய திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் மத்திய உணவு பொருள் சேமிப்பு நிறுவனம் பெரும் பங்காற்றுவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சர்கள் திரு.V.L.வர்மா, திருமதி. நிமுபென் ஜெயந்திபாய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**********

**வாக்காளர்அட்டை**

நாட்டின் வெவ்வேறு மாநிலங்களை சேர்ந்த வாக்காளர்களுக்கு ஒரே வாக்காளர் எண் ஒதுக்கப்பட்டதன் மூலம் அவர்கள் போலி வாக்காளர்களாக கருதப்பட மாட்டார்கள் என தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஒரே வாக்காளர் எண்ணை கொண்ட வாக்காளர்களுக்கு சட்டமன்ற தொகுதி, வாக்குச்சாவடி உள்ளிட்ட பிற விவரங்கள் மாறுபடும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

இருவேறு மாநிலங்களின் வாக்காளர்கள் ஒரே வாக்காளர் எண்ணை கொண்டுள்ளதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து இந்த விளக்கத்தை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

**********

**ஆளுநர்**

தமிழக மீனவர்கள் கைது பிரச்சனைக்கு மத்திய மாநில அரசுகள் இணைந்து தீர்வு காண முடியும் என்று தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களை இன்று சந்தித்து பேசிய அவர், மீனவர்களின் பிரச்சனை குறித்து மத்திய அரசின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு செல்லப்படும் என்றார்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்த ஆளுநர், மீனவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

**********

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நாகை பால்பண்ணைசேரி அரசு தொழில்நுட்ப பயிலகத்தில் நாளை பல்வேறு நல திட்ட உதவிகளை வழங்குகிறார்.

முதலமைச்சரின் வருகையை ஒட்டி மாவட்டத்தில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**********

புத்தக கண்காட்சி

போட்டி தேர்வுகளை எதிர்கொள்ள மாணாக்கர் நூலகங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாநில வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி வலியுறுத்தியுள்ளார்.

விழுப்புரத்தில் 3ஆவது புத்தக கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர் மாணாக்கரிடையே வாசிப்பு பழக்கத்தை பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

100 அரங்குகளுடன் வரும் 12ஆம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியை மக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

**********

பட்ஜெட்

தமிழக பட்ஜெட் வரும் 14ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் நிலையில் வேளாண் நிதிநிலை அறிக்கை தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாநில வேளாண் அமைச்சர்

திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்றது.

இந்தாண்டு முதல் முறையாக பொருளாதார ஆய்வறிக்கையை தமிழக அரசு சமர்ப்பிக்க உள்ளது.

**********

**வானதி ஸ்ரீனிவாசன்**

நிதி மேலாண்மையிலும் பொருளாதாரத்திலும் மகளிர் தன்னிறைவு பெறவேண்டியதன் அவசியத்தை பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ''வளம்'' என்ற திட்டத்தின் மூலம் பெண்களை தொழில்முனைவோர்களாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறினார்.

**வாய்ஸ்**

**********

**12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு**

தமிழகத்தில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் நாளை தொடங்க உள்ள நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 3 ஆயிரத்து 316 தேர்வு மையங்களில் 8 லட்சத்து 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் இத்தேர்வை எழுதுகின்றனர்.

18 ஆயிரத்து 344 தனித்தேர்வர்களும்,

145 சிறை கைதிகளும் இத்தேர்வை எழுத உள்ளனர்.

**********

**இருவரி**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் நான்முதல்வன்** திட்டத்தின் கீழ் இளைஞர்கள் திறன்பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்பு பெற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார்** துறைமுகத்தில் நடப்பு நிதியாண்டில் இதுவரை 7 லட்சத்து 21 ஆயிரம் சரக்கு பெட்டகங்கள் கையாளப்பட்டுள்ளதாக துறைமுக ஆணைய தலைவர் சுஷாந்த் குமார் ப்ரோகித் தெரிவித்துள்ளார்.

**பெரம்பலூர் மாவட்டம் பெரியம்மாபாளையம்** ஊராட்சியில் மியாவாக்கி குறுங்காடுகளை உருவாக்கும் வகையில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை 8.5 ஏக்கர் பரப்பளவில் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**********

**ஏற்காடு கோடைவிழா**

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் வரும் மே மாதம் நடைபெற உள்ள கோடை விழா மற்றும் மலர் கண்காட்சிக்கான முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**விலங்குகள்**

**நீலகிரி மாவட்ட வனப்பகுகளில் கோடை** வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளதை அடுத்து முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டு வருகின்றன.

688 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள முதுமலை புலிகள் காப்பகத்தில் யானைகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 தொட்டிகளில் கோடை காலம் முழுவதும் தண்ணீர் நிரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

**ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் - மைசூர் தேசிய** நெடுஞ்சாலையை ஒட்டிய வனப்பகுதிகளில் வறட்சி காரணமாக யானைகள் வனப்பகுதியிலிருந்து வெளியேறி சாலைகளில் நடமாடுவதால் வாகன ஓட்டிகள் பாதுகாப்புடன் இருக்குமாறு வனத்துறை எச்சரித்துள்ளது.

**********

**நெல்லை**

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் கன மழை காரணமாக பல்வேறு அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**தண்ணீர் திறப்பு**

விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணையிலிருந்து பாசனத்திற்காக நாளைமுதல் தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

135 நாட்களுக்கு திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வீடூர், சிறுவை, பொன்னம்பூண்டி, எரையூர் புதுக்குப்பம் லிங்காரெட்டி பாளையம் உள்ளிட்ட பகுதிகளுக்குட்பட்ட மூவாயிரத்து 200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

**********

**கோவில்**

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைகாடு அருள்மிகு பகவதிஅம்மன் கோவில் மாசி கொடை விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**சென்னை தங்கசாலை ராமர்கோவில் குடமுழுக்கு இன்று** விமரிசையாக நடைபெற்றது.

மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு உள்ளிட்ட ஏராளமானோர் இதில் கலந்துகொண்டனர்.

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி** திருக்கோவில் மாசி திருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் வரும் 12ஆம் தேதி நடைபெறுகிறது.

**********

**கிரிக்கெட்**

ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் துபாயில் இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா -நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி வரும் செவ்வாய்கிழமை நடைபெற உள்ள அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளும். தோல்வியுறும் அணி வரும் புதன்கிழமை தென்னாப்பிரிக்காவுடன் மோத உள்ளது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**